ஆகவே, இந்த இடத்திலே அமைந்திருக்கின்ற இந்த அலுவலகத்தினால் இரண்டு வட்டங்களிலேயும இருக்கின்ற ஆதிதிராவிடப் பெருமக்கள் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு மிகவும் வசதியாக இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போன்று பெருந்துறைக்கு மாற்றினோம் என்று சொன்னால் தாராபுரத்திலே இருக்கின்ற ஆதிதிராவிடப் பெருமக்கள் ஏறத்தாழ 70 கிலோ மீட்டர் பயணம் செய்து அவர்களுடைய குறைகளைச் சொல்ல வேண்டியிருக்கும் என்ற காரணத்தினால் இதைப் பரிசீலப்பதற்கில்லை.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாற்றாததற்கு முன் 12 மைல் சென்று ஈரோடு அரிசன நலத் துறை தாசில்தார் அலுவலகத்தில் வேலைபார்க்க வேண்டியிருந்தது. மாற்றப்பட்ட பின் நிலைமை என்னவென்றால் 20 மைல் தூரம் செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, பெருந்துறை ஒன்றியத்தையாவது ஈரோட்டுடன் இணைக்கின்ற உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் தலைவரவர்களே, அத்தகைய உத்தேசம் இல்லை.

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்னார்கள், அதை மாற்றியது மத்தியில் இருப்பதற்காகவும், அவர்களுடைய சௌகரியத்திற்காகவும் என்று சொன்னார்கள். ஆனால் அவர்களுடைய சௌகரியத்திற்காக வேண்டி ஒரு ஜீப் வசதி கொடுத்தால்தான் நல்ல முறையில் செய்ய முடியும். அங்கே ஜீப் வசதியும் கொடுப்பதில்லை; யூனியன் என்று சொன்னால் அவர்களும் கொடுப்பதில்லை; வெல் பேர் ஆபீஸ் என்றால் ஜில்லாவிற்கு ஒரு ஜீப்தான் இருக்கிறது. அதனால் அவர்களால் சிலவ வேலைகளைச் செய்ய முடியவில்லை. ஆகவே, தமிழ் நாட்டில் ஒட்டுமொத்தமாக அதிகாரிகளை அதிகரிக்க வேண்டும் அல்லது அவர்களுக்கு வாகன வசதிகளையாவது செய்து தரவேண்டுமென்ற எண்ணம் எதிர் காலத்திலாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகன வசதி செய்து தருவதற்கு நிதி வசதி இல்லை. ஆனால், அதிகாரிகளைப் பொறுத்தவரையில் அதிகப்படுத்துவதைக் குறித்து அரசு பரிசீலிக்கும்.

கரூர் அரசினர் மாணவியர் விடுதி.

*வினா எண் 631—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி மாவட்டம் கரூர் அரசினர் மாணவியர் விடுதி தற்போது இயங்கி வரும் இடத்தை காலி செய்ய வேண்டுமென கோர்ட் தீர்ப்பு வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) சென்னை உயர்நீதி மன்றம் கரூரில் உள்ள விடுதியினை 30–4–1981-க்குள் காலி செய்யும்படி தீர்ப்பு அளித்துள்ளது.

(ஆ) சென்னை உயர் நீதி மன்றத்தின் தீர்ப்புப்படி திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூரில் உள்ள அரசு ஆதி திராவிட மாணவியர் இல்லம் ஜவஹர் பசாரில் 578 கதவு எண் உள்ள வேறொரு வாடகை கட்டிடத்திற்கு 16–3–1981 அன்று மாற்றப் பட்டுவிட்டது.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது மாற்றப்பட்டுள்ள இந்த மாணவியர் இல்லம் மிகவும் சந்தடியான பசாரில் உள்ள நெருக்கடியான இடத்தில் இருக்கிறது. ஆகவே, அதற்கென்று அரசாங்கம் சொந்தமான இடத்தை வாங்கி, சொந்தமாகவே கட்டிடம் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே என்னுடைய கட்சியின் சார்பாகவும், மற்ற பல கட்சிகள் சார்பாகவும் மதுரை இன்ஜினீயரிங் கல்லூரியில் நடைபெற்ற இரண்டு மாணவர்கள் கொலை பற்றி. . .

(கூச்சல்-குழப்பம்.)